**களுகங்கை நீர் வழங்கல் விரிவாக்கல் செயற்திட்டம் (1) - 2024**

-----------------------------------------------------------------------------------------------

களுகங்கை நீர் வழங்கல் விரிவாக்கல் செயற்திட்டம் (1) இன் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிகூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 யூலை 07 ஆம் திகதிய எஸ்எல்-பீ 117 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் செயற்திட்ட விஞ்ஞாபனத்தின் 19 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

செயற்திட்டக் கடன் உடனபடிக்கைகளின் பிரகாரம் முன்னாள் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சாவிருந்த தற்போதைய நகர அபிவிருத்தி, நிர்மாண மற்றும் வீடமைப்பு அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச்சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவரகவுள்ளது. களுகங்கை நீர் வழங்கல் வசதிகளை விரிவாக்குவாக்குவதன் மூலம் மேல் மாகாணத்தின் தெற்கு பகுதியில் பாதுகாப்பான நீர் வழங்குதல் மற்றும் வினைத்திறனான நீர் வழங்கலை அதிகரித்தல் மற்றும் நீர் விநியோக வலையமைப்பை மீள்கட்டமைத்தல் அவற்றின் மூலம் அந்த மக்களின் வாழ்வாதார நிலைகளை முன்னேற்றுவதற்கு பங்களிப்புச் செய்வதே செயற்திட்டத்தின் நோக்கமாக உள்ளது. செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 55,338 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 39,067 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 45,056 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 31,810 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டதுடன் மிகுதி ரூபா 10,282 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2020 திசெம்பரில் தொடங்கியிருந்ததுடன் 2025 ஏப்ரல் அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. 2024 யூலை 24 இலிருந்து ஜப்பான் அரசாங்கம் நிதியளித்தலை மீளத் தொடங்கியதுடன் செயற்திட்ட நடவடிக்கைகள் மீண்டும் தொடங்கப்பட்டதுடன் இதன்படி திருத்தப்பட்ட அமுலாக்கல் திட்டம் 2028 ஒக்தோபரில் பூர்த்தியாக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

### 1.3 அபிப்பிராயம்

2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு

அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய

முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1. செயற்திட்ட நடவடிக்கைகள் மீதான பௌதீக முன்னேற்றம்

செயற்திட்ட நடவடிக்கைகள் ஐந்து ஒப்பந்த பொதிகளைக் கொண்டுள்ளதுடன் முதலில் 2020 திசெம்பரில் ஆலோசனை ஒப்பந்தம் தொடங்குவதற்கு திட்டமிடப்பட்டதுடன் 65 மாதங்களிற்குள் பூர்த்தியாக்கப்பட வேண்டியிருந்தது. செயற்திட்டம் மற்றும் செயற்திட்ட நடவடிக்கைகள் 2022 ஒக்தோபர் 28 இல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. RAMP குழு மூலமான பரிந்துரைகளை தொடர்ந்து 2024 யூலை 24 இல் ஜப்பான் அரசாங்கத்தால் நிதியளிப்பு மீள தொடங்கப்பட்டதுடன், செயற்திட்ட நடவடிக்கைகள் மீளத் தொடங்கப்பட்டது. திருத்தப்பட்ட திட்டத்தின் பிரகாரம் செயற்திட்டம் 2028 ஒக்தோபரில் பூர்த்தியாக்குவதற்கு பட்டியலிடப்பட்டதுடன் ஆலோசனை சேவைகள் மாத்திரம் 2024 இல் தொடங்குவதற்கு பட்டியலிடப்பட்டது. முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது ஆலோசனை சேவை நடவடிக்கைகளிற்காக 63 சதவீத இலக்கு அடையப்பட்டிருந்தது.

### 2.2 செயற்திட்ட கண்காணிப்பு பிரிவு தொடர்பான பிரச்சனைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளின் பரிந்துரை |
|---|---|---|
| செயற்திட்ட உத்தியோகத்தர்களிற்கு குறித்த பொறுப்புகளை ஒதுக்குவதற்கும் அவர்களுடைய பணிகளின் நிறைவேற்றலை கண்காணிப்பதற்கு செயலாற்றல் குறிகாட்டிகளை விருத்திசெய்வதற்கும் அவசியம் இருந்த பொதிலும் அத்தகைய செயலாற்றல் குறிகாட்டிகள் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. மேலும் தனிப்பட்ட பொறுப்புக்களிற்கு எதிராக முன்னேற்றங்களை கால அடிப்படையில் அளவிடுவதற்கு முறையான பொறிமுறை இருக்கவில்லை. | செயற்திட்ட அலுவலகம் மீள தாபித்த பின்னர் செயற்திட்டத்திற்கான நிரந்தர உத்தியோகதத்தர் நியமனம், செயலாற்றல் குறிகாட்டிகள் மற்றும் உத்தியோகத்தர் கடமைகள் என்பன விருத்தி செய்யவேண்டியிருந்தது. | செயற்திட்ட வினைத்திறனை உயர்த்துவதற்கு கண்காணிப்பு பொறிமுறை அமுலாக்கப்பட வேண்டும். |